<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>04.08.2026</u>**
OS. No.<u>. 11/2020</u>
பக்கம் – 1
DW1 – Prasanna (D4)

**<u>வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனது தாயார் மற்றும் சகோதிரி ஆவார்கள். வா.சா.ஆ–1 ல் நானும் எனது தாயாரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளோம் என்று நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் முதல் சாட்சி கையொப்பம் என்னுடைய அம்மா கையொப்பம் என்றும் 2 வது கையொப்பம் என்னுடையது என்றால் சிரிதான். வா.சா.ஆ.1 ல் எனது அ ப்பா ஆதிநாராயணன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ1 உள்ள விவரம் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதால் என்க்கு தெரியும் என்றால் தெரியாது காரணம் நான் வெற்று பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். நான் வெற்று பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ4 முதல் பிரதிவாதி எனக்கு செட்டில் மெண்ட் எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். எங்கள் அப்பா வாதியிடமிருந்து கடன் பெற்றுள்ளார் என்றும் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஸ்ரீவெங்கடேஸ்வரா ஏஜென்சில் வேலை செய்து வருகிறேன். எனக்கு மாத ஊதியம் ரூ.15,000/– லிருந்து ரூ.18,000/– வரை. நான் மாதம் 1 லட்சம் சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரூ.15,000/– லிருந்து ரூ.18,000/– சம்பாதிக்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.